**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: C.C.201/2014**
**Deposition of witness for prosecution -PW-3**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. சசிவர்ணம் |
| Father Name | : | திரு. பாண்டி |
| Village | : | மானாமதுரை |
| Taluk | : | மானாமதுரை |
| Calling | : | தலைமை காவலர் |
| Religion | : | இந்து |
| Age | : | 42 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 08th day of October 2021.

முதல் விசாரணை :-

நான் சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2013 ஆம் வருடம் தேவிப்பட்டிண கடற்கரை காவல் நிலையத்தில் காவலராக பணியிலிருந்தபோது 23.10.2013 - ஆம் தேதி மதியம் 23.30 மணிக்கு பத்தனேந்தல் விளக்கு ரோடு அருகே சார்பாய்வாளர் முத்துச்செல்வம் தலைமையில் நானும் காவலர் கோவிந்தவர்மன் , தலைமை காவலர் வெள்ளைச்சாமி ஆகியோருடன் ரோந்து பணியிலிருந்த போது ஆஜர் எதிரி அர்ச்சுனன் மற்றும் ராமு ஆகியோர் இருசக்கர வாகனமான ஸ்டார் சிட்டியில் வந்தவர்களை பிடித்து வாகன சோதனை செய்த போது காய்ந்த நிலையில் சுமார் 350 கிராம் எடையுள்ள கடல் குதிரை மற்றும் 1.700 கிராம் எடையுள்ள சங்கு நாகனம் ஆகியவற்றை சார்பாய்வாளர் கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்தார். அந்த அத்தாட்சியில் நான் 3 வதாக கையொப்பம் செய்தேன். அது அ.த.சா.ஆ.2 ஆகும். அதன் பின்னர் கைப்பற்றப்பட்ட பொருட்களையும் எதிரியையும் வன சரக அலுவலகம் இராமநாதபுரத்தில் ஒப்படைத்தோம்.